முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1189

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.12.2022**, சனிக்கிழமை

1. தன்னலம்கருதா ஞான உலகினை படைக்க
   தனிப்பெருங்கருணைகொண்டு உலகோர்க்கு
   அருளுகின்ற அண்ணலே அரங்கனே ஆறுமுக ஞானியே
   ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 16 ம் நாள் 31.12.2022, சனிக்கிழமை)
2. மெய் ஞானமிக்க அரங்கன் உன் சன்மார்க்கமே
   மண்ணுலகை மீட்டு காத்தருளும்
   ஐயா என உலகோர் அனுதினமும் உன் நாமஜெபத்தை சொல்லி
   அளவிலா தர்மத்தை வளர்க்க
3. வளர்க்கவே இந்த உலகில் மாற்றம்
   வல்லமைமிக்க ஞான ஆட்சிக்காலமாக உருவாகும்
   ஆகவே கலியுகத்தார் அரங்கன் குடில் நோக்கி
   அவசியம் சென்று கண்டு வணங்கி
4. அழியாமை தருகின்ற உயர் ஞானத்தை
   அரங்கன் பால் திருவடி தீட்சையாகப் பெற்று
   பெற்றுமே உலகோர் சரணடைய
   பிசகின்றி ஓங்காரக்குடில் சக்தி பெருகி
5. உற்றதொரு உலகமெங்கும் ஞானவான்கள் படை
   உயர் தொண்டு மிக்க சக்தியாக மாறி
   மாறியே உலகம் ஞான லோகமாகும்
   மக்களை காக்கும் ஞானிகள் ஆட்சி உதயமாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–